කාර්යාලය
அலுவலகம் } +94 (0) 11 2439352
Office

ලේකම්
செயலாளர் } +94 (0) 11 2320252
Secretary

ෆැක්ස්
தொலைநகல் } +94 (0) 11 2435134
Fax No

විද්‍යුත් තැපැල
மின் அஞ்சல் } secretary@portmin.gov.lk
E-mail

**වරාය, නාවික හා ගුවන් සේවා අමාත්‍යාංශය**
**துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**
**Ministry of Ports, Shipping and Aviation**

මගේ අංකය / எனது இல / My Number } MPS/P&D/02/04/08 Vol ii
ඔබේ අංකය / உமது இல / Your Number }
දිනය / திகதி / Date } 2022.11.29

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்

**<u>வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்திற்கூடாக சரக்குகளை இறக்குமதி செய்தலும் ஏற்றுமதி செய்தலும்</u>**

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமானது இலங்கை தேசிய கடல் மார்க்கமான சரக்கனுப்பல் நிறுவனமாக வியாபாரக் கப்பல் தொழிற்றுறையில் 50 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்துடன் முழுமையாக அரசுக்குடமையான கம்பனியொன்றாகும்.

தற்போது, வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமானது (CSCL) அதன் வியாபாரச் செயற்பாடுகளை விரிவாக்கி, போட்டிகரமான விலைகளில் அரசாங்கத் துறைக்கும் அதேபோன்று தனியார் துறைக்கும் வினைத்திறனாக சேவைகளை வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

02. CSCL ஆனது கீழே பட்டியலிடப்பட்ட சரக்குக் கையாள்கைச் சேவைகளை உரிய நேரத்திலும் செலவுப் பயனுறுதி வாய்ந்த விதத்திலும் வழங்கிவருகின்றது.

i. உலகில் எங்கிருந்தும் வேறு எந்த இடத்திற்கும் சரக்கு போக்குவரத்து சேவைகள்
ii. சரக்கு போக்குவரத்துக்கான ஆவணத் தயாரிப்பு சேவைகள்
iii. இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளுடன் தொடர்புபட்ட சுங்க இசைவாக்கச் சேவைகள்
iv. சரக்குக் காப்புறுதிச் சேவைகள்
v. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை அவற்றின் இறுதி சேரிடத்திற்கு இடநகர்த்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகள்

03. வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் சார்பில் அரச நிறுவனங்களின் இறக்குமதிச் சரக்குகளை ஒதுக்கீடுசெய்தல் தொடர்பான 2005.05.06 ஆம் திகதிய 415 ஆம் இலக்க மற்றும் 2016.02.18 ஆம் திகதிய 03 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகளின்பால் தங்களின் தயவான கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன்

(உரிய சுற்றறிக்கைகள் இணைப்பு 1 மற்றும் இணைப்பு 2 ஆக இணைக்கப்பட்டுள்ளன). 2016.02.18 ஆம் திகதிய 03 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 01 ஆம் பந்திக்கிணங்க, பொருட்களை இறக்குமதி செய்யும் போது 2005.05.06 ஆம் திகதிய 415 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை கண்டிப்பாக பின்பற்றுமாறு சகல அரச நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும், தரப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு மாறாக சில அரச நிறுவனங்கள் செயற்பட்டுவருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இது, அரசாங்கத்தின் சுற்றறிக்கைகளுக்கு முரண்படுவது மட்டுமன்றி, பணம் நாட்டைவிட்டு வெளிப் பாய்வதற்கு வழிவகுப்பதுடன் அதேபோன்று நாடும் அரச நிறுவனங்களும் அவற்றுக்கு உரித்தான நன்மைகளைப் பெறமுடியாத ஒரு நிலையையும் உருவாக்குவதாக உள்ளது.

04. ஆதலால், மேற்போந்த விடயங்களின் மீது தங்களின் விசேட கவனம் வேண்டப்படுவதுடன், தங்களின் விடய நோக்கெல்லைக்கு கீழ்வரும் அனைத்து நிறுவனங்களுக்கும், அவற்றின் பொருட்களை இறக்குமதி செய்யும் போது 2005.05.06 ஆம் திகதிய 415 ஆம் இலக்க மற்றும் 2016.02.18 ஆம் திகதிய 03 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளை கண்டிப்பாக பின்பற்றுமாறு ஆலோசனை வழங்குங்கள்.

அத்துடன், இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தினால் போட்டிகரமான வீதங்களில் வழங்கப்படும் பல்வேறுபட்ட சேவைகளை தங்களின் விடய நோக்கெல்லைக்கு கீழ்வரும் அனைத்து நிறுவனங்களுக்கும் கிடைக்கச் செய்தலானது நாட்டில் அந்நியச் செலாவணியை சேமிக்கும், அது நாட்டில் தற்போதுள்ள பாதகமான பொருளாதார நிலைமையைத் தணிக்க உதவும் என்பதுடன் தேசிய கடல் மார்க்கமான சரக்கனுப்பல் நிறுவனமாக CSCL இனால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு தங்களின் பங்களிப்பாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

05. சகல விசாரணைகளுக்கும் கீழே தரப்பட்ட பதவிப்பெயரைக் கொண்ட உத்தியோகத்தர்களை தயவுசெய்து தொடர்பு கொள்க.

| **உத்தியோகத்தரின் பெயர்** | **தொலைபேசி** | **கையடக்கத் தொலைபேசி இலக்கம்** | **மின்னஞ்சல்** |
|---|---|---|---|
| தலைவர் | 011 232 9903 | 070 689 8023 | chairman@cscl.lk |
| பொது முகாமையாளர் | 011 232 4873<br>011 232 8997 | 071 446 8356 | gm@cscl.lk |

| | | | |
|---|---|---|---|
| உதவிப் பொது முகாமையாளர் (சரக்குக் கையாள்கை) | 011 232 5744 | 071 0215 708 | niroshana@cscl.lk |

கே.டி.எஸ். ருவன்சந்திர
செயலாளர்

பிரதிகள்: 1. சனாதிபதியின் செயலாளர்

2. பிரதம அமைச்சரின் செயலாளர்
3. நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர்
4. அரசாங்க நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதி
5. கணக்காய்வாளர் அதிபதி

Public Finance Circular No: 415

Treasury No: PUB/FIN/T/02/10
Department of Public Finance
General Treasury, Colombo 01.

06. 05. 2005

C... Shipping Corporation
Chairman's Office
30 JUN 2005

To. All Secretaries to Ministries.
Chief Secretaries of Provincial Councils.
Heads of Departments.
Chairman of State Corporations, Statutory Boards.
Government Owned Companies,
Heads of Local Authorities and Project Directors
And Governor of Central Bank.

## RESERVATION OF IMPORT CARGO FOR THE CEYLON SHIPPING CORPORATION LIMITED (CSCL)

1. Your kind attention is drawn to public Finance Circular No. Fin 347, dated 03rd September 1996, with regard to the above matter.

The Cabinet has decided at its meeting held on 21. 12. 2004 to continue the Government Import Cargo Reservation Scheme for the Ceylon Shipping Corporation Limited, with immediate effect.

Therefore, it is a requirement that all government agencies such as Ministries, Departments, Corporations, Statutory Boards Including Foreign Funded Projects, Government owned Companies which import cargo from foreign countries should make their purchases on FOB terms or any other similar INCO terms as stipulated in their Letters of Credit (L/C) that the cargo should be carried on Ceylon Shipping Corporation vessels.

2. All government agencies should invite offers for cost of goods (FOB terms or any other similar INCO terms excluding freight) and freight (C & F terms or any other similar INCO terms) separately when calling tenders. It would then be possible for those government agencies to take up with the CSCL to negotiate the best terms for shipping goods and to consider whether it would be cheaper on the overall to import on 'freight payable at destination basis' (FOB terms or any other similar INCO terms for payment of freight at destination) through CSCL. It is therefore imperative that CSCL be consulted before a final award is made. If carriage through CSCL is favorable a clause should be inserted in the letter of credit and sale contract that 'cargo should be shipped on a vessel of CSCL or a vessel nominated by CSCL under CSCL Bill of Lading on freight payable at destination basis'

3. All departments and purchasing institutions should submit one copy of the Proforma Invoice indicating freight, to CSCL before placing the order / opening L/C with the following information to obtain the written confirmation from CSCL

3/3

that it could accept carriage on 'freight payable at destination basis' at competitive freight rates or at most without exceeding the rates of the suppliers freight quotation. If CSCL freight is higher than the suppliers quotation a written waiver should be obtained from CSCL enabling to entrust the suppliers to arrange shipment according to their quotation on freight pre- paid basis.

All government agencies should submit one copy of the purchase order to the CSCL within one week of placing the order, with the following information.

(a) Nature of cargo:
(b) Approximate quantity of cargo in tons/ cubic meters/ number of packages and measurements of packages:
(c) FOB value:
(d) Full particulars of the supplier and the probable part of shipment:
(e) The approximate delivery dates:

At present the CSCL provides regular liner services from all over the world. Contact details of the CSCL agents could be obtained from the CSCL web site www.cscl.lk or from the corporations' liner department on Tele. / Fax No. 2325744 / 2449486.

All government agencies should ensure that the suppliers of their cargo are requested to contact these agents in order to arrange shipments under CSCL Bill of Lading once freight is agreed with CSCL.

No commercial bank shall open L/C for imports by any government institutions without stipulating that the cargo must be carried under CSCL Bill of Lading unless a letter of waiver signed by the liner manager of CSCL is enclosed to the documents forwarded to open L/C or any other type of import payment documents.

Secretaries to Ministries are requested to bring the contents of this circular to the notice of corporations, boards, other statutory bodies and government owned companies under their Ministries. for compliance.

The Governor of the Central Bank is requested to advice all commercial banks to strictly implement this regulation as mention in para. 7 above.

S.B. Divaratne
Deputy Secretary to the Treasury.

Copy to : Auditor General